

தேனி வடக்கு மாவட்டம் தேனி அல்லிநகரம் மற்றும் பழைய பேருந்து நிலையம் அருகே தேனி நகர இளைஞர் அணி சார்பில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அரவிந்த், மாவட்ட துணை அமைப்பாளர் செல்லத்துரை ஆகியோர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசீப்கான் முன்னிலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் மற்றும் தி.மு.க. அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் நடைபெற்றது. இதில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன் மற்றும் இளம் பேச்சாளர் சுருதி. தொகுதி பொறுப்பாளர் முத்துராமலிங்கம். ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை தொகுதியில் நியாய விலைக் கடைகள்; தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சிவகங்கை, ஜூன் 26 -

சிவகங்கை மாவட்டம் மானாமதுரைதொகுதி சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திருமதி. தமிழரசி ரவிக்குமார் தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெரும்பச்சேரி, விளத்தூர் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக் கடைகளை திறந்து வைத்தும் மேட்டு மடை, ஆலடி நத்தம், ஆகிய ஊர்களில் புதிதாக கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை திறந்து வைத்தும், மேல பசலையில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியினை துவக்கி வைத்தும், சின்ன கண்ணனூரில் அங்கன்வாடி மையம் புதிதாக கட்டப்பட்ட நாடக மேடை ஆகியவற்றை திறந்து வைத்துசிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை மேற்கு ஒன்றிய செயலாளர் மா.அண்ணாதுரை, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை மற்றும் ஊராட்சிக் கழக, ஒன்றிய கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.




## தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

**கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அறிவிப்பு!**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 26.06.2025 | கிணத்துக்கடவு தெற்கு ஒன்றியம் | தாமரைக்குளம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி எஸ்.இம்ரான் கான் |
| 2 | | கிணத்துக்கடவு மத்திய ஒன்றியம் | வடசித்தூர் | வழக்கறிஞர் ஆர்.தென்னை சிவா எஸ்.இம்ரான் கான் |
| 3 | | கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம் | பனப்பட்டி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி எஸ்.இம்ரான் கான் |
| 4 | 27.06.2025 | பொள்ளாச்சி வடக்கு நகரம் | புதிய பேருந்து நிலையம் | உடுமலை தண்டபாணி ச.பூங்கொடி |
| 5 | | பொள்ளாச்சி (வ) தெற்கு ஒன்றியம் | நடுப்புணி ஜங்சன் | உடுமலை தண்டபாணி ச.பூங்கொடி |
| 6 | | ஆனைமலை வடக்கு ஒன்றியம் | அம்பராம்பாளையம் | ஆம்பூர் தர்மன் பி.கவிஸ்ரீ |
| 7 | | வேட்டைக்காரன்புதூர் பேரூர் | சேத்துமடை | கோட்டூர் முருகன் பி.கவிஸ்ரீ |
| 8 | | ஒடையகுளம் பேரூர் | பேரூராட்சி அலுவலகம் | கி.அ.ராஜன் பி.கவிஸ்ரீ |
| 9 | 28.06.2025 | கோட்டூர் பேரூர் | குமரன் கட்டம் | சிங்கை சௌந்தர்ராஜன் பி.கவிஸ்ரீ |
| 10 | | ஆனைமலை கிழக்கு ஒன்றியம் | நஞ்சேகவுண்டன்புதூர் | சிங்கை சௌந்தர்ராஜன் பி.கவிஸ்ரீ |
| 11 | | ஆனைமலை பேரூர் | நெல்லுக்குத்திப்பாறை | ஆரணி மாலா பி.கவிஸ்ரீ |
| 12 | | ஒத்தக்கால்மண்டபம் பேரூர் | திருவள்ளுவர் அரங்கம், மில் கேட். | ஆரணி மாலா எஸ்.இம்ரான் கான் |
| 13 | | செட்டிபாளையம் பேரூர் | ஆட்டோ ஸ்டாண்ட் அருகில், செட்டிபாளையம். | குரும்பை கனகராஜ் எஸ்.இம்ரான் கான் |
| 14 | | மதுக்கரை ஒன்றியம் | சீராபாளையம் | கோவை சம்பத் எஸ்.இம்ரான் கான் |
| 15 | 29.06.2025 | வால்பாறை நகரம் | அண்ணா சிலை | பொம்மபுரம் விஜயரத்தினம் ச.பூங்கொடி |
| 16 | | மதுக்கரை நகரம் | குரும்பபாளையம் | கோவை துரைமுருகன் ஏ.ஆட்லின் |
| 17 | | எட்டிமடை பேரூர் | பாவேந்தர் திடல், பேருந்து நிறுத்தம் அருகில். | பசுமை நிழல் விஜயகுமார் ஏ.ஆட்லின் |
| 18 | | திருமலையாம்பாளையம் பேரூர் | பட்டத்தரசி அம்மன் கோயில் தெரு, மாஸ்தி கவுண்டன்பதி. | கோவை துரைமுருகன் ஏ.ஆட்லின் |
| 19 | 30.06.2025 | கல்தான்பேட்டை கிழக்கு ஒன்றியம் | அய்யம்பாளையம் | அதிரடி அல்தாப் செ.மதுமிதா |
| 20 | | கல்தான்பேட்டை மேற்கு ஒன்றியம் | கள்ளப்பாளையம் | அதிரடி அல்தாப் செ.மதுமிதா |
| 21 | | சூலூர் தெற்கு ஒன்றியம் | பீடம்பள்ளி | திருப்பூர் சல்மான் செ.மதுமிதா |

**கோவை**

நாள் : 24.06.2025

கலைஞர் 100 1924 - 2023






## தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

**சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் அறிவிப்பு!**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 29.06.2025 | திருவொற்றியூர் மேற்குப் பகுதி | சத்தியமூர்த்தி நகர் பேருந்து நிலையம் | தமிழ்சாதிக் தி.கோகுல் |
| 2 | 30.06.2025 | திருவொற்றியூர் கிழக்குப் பகுதி | தேரடி ஈசானி மூர்த்தி கோயில் தெரு | போடி காமராஜ் ர.சந்தோஷ்ஜெய் |
| 3 | 04.07.2025 | மாதவரம் தெற்குப் பகுதி | டீச்சர்ஸ் குடியிருப்பு அருகில் | முரசொலி மூர்த்தி எஸ்.மாறன் |
| 4 | 05.07.2025 | சோழவரம் தெற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், போஸ்ட் ஆபீஸ் தெரு, சோழவரம். | அத்திப்பட்டு சாம்ராஜ் க.சுபத்ரா |
| 5 | 06.07.2025 | திருவொற்றியூர் மத்தியப் பகுதி | அண்ணா சிலை அருகில், மணலி. | திருப்பத்தூர் ரஜினி அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 6 | 11.07.2025 | வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் | அம்பேத்கர் சிலை அருகில், பாலவேடு ஊராட்சி. | ஆடுதுறை உத்திரபதி சாய் ரித்திக் சக்திவேல் |
| 7 | 17.07.2025 | புழல் ஒன்றியம் | சென்றம்பாக்கம் | ஒப்பில்லாமணி க.ஹேமநாதன் |
| 8 | 18.07.2025 | செங்குன்றம் பேரூர் | செங்குன்றம் சந்திப்பு அருகில், தேவகி தெரு. | பசும்பான் ரவிச்சந்திரன் அ.தஸ்னீம் பானு |
| 9 | 28.07.2025 | மாதவரம் வடக்குப் பகுதி | தீயம்பாக்கம் | தக்கோலம் தேவபாலன் செ.ஜோதி |

**சென்னை**

நாள் : 24.06.2025

கலைஞர் 100 1924 - 2023



### ஓய் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமை: கிருஷ்ணகிரியில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஜூன் 26 –

கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் தாகத்தை தீர்க்க ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்ட த்தில் மாநகர செயலாளரும், மேயருமான சத்யா, வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய செயலாளர்கள் கஜேந்திரமூர்த்தி, ஸ்ரீனிவாசலூ ரெட்டி, திவாகர், சின்ராஜ், நாகேஷ், ரகுநாத், பாக்யராஜ், கருணாகரன், ஸ்ரீதர், ராஜா (எ) தணிகாசலம், பகுதி செயலாளர்கள் ஆனந்தய்யா, ராமு பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர், மாநகர அவை தலைவர் செந்தில்குமார், மாநகர துணை செயலாளர் கோபாலகிருஷ்ணன் முன்னாள் நகர செயலாளர் மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மாவட்ட துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் துணை பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., சிறப்புரையாற்றினார் கழக துணை பொதுசெயலாளர் திருச்சி சிவா பேசும் போது ஓசூரில் 3 சிப்காட்களை நிறுவியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தற்போது முதல்வர் அவர்கள் 4வது சிப்காட்டை நிறுவி, அதில் பன்னாட்டு நிறுவனங் களை கொண்டு வந்ததால், இளைஞர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. தமிழ்நாட்டில் அரசு மற்றும் அலுவல் மொழியாக தமிழும், ஆங்கிலமும் மட்டும் தான் என அண்ணா தெரிவித்தார். இருமொழிக் கொள்கை மூலம் படித்த தமிழர்கள், உயர் பதவிகளை வகித்து வருகின்றனர்.


கூகுள் நிறுவனத்தில் உயர் பதவியை வகித்து வரும் சுந்தர்பிச்சை, இருமொழிக் கொள்கையில், அரசு பள்ளியில் படித்தவர். நிலவில் தண்ணீர் இருக்கிறது என்று கண்டுபிடித்த சந்திரயானை உருவாக்கிய இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, அக்னி 1 பிதாமகன் அப்துல் கலாம் ஆகியோரும்,

இருமொழிக் கொள்கையில் படித்தவர் கள்தான். அமெரிக்கா பொருளாதாரத்தில் பெரும்பான்மையை தீர்மானிக்கிறவன் தமிழன். பல நாடுகளில் ஆளுகின்ற பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தமிழர்கள். எங்களை பார்த்து, இதைப் படித்தால் தான் உருப்பட முடியும் என்று போதிக்கின்ற தகுதி எவருக்கும் இல்லை. இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாவட்ட பொருளாளர் சுகுமாரன், இளைஞரணி மாநில துணை செயலாளர் சீனிவாசன், பொருளாளர் சுகுமாரன், மாநில விவசாய அணி துணை செயலாளர் அரியப்பன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஞானசேகரன், மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ் பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன், சீனிவாசன், தனலட்சுமி, அருணா பூசன்குமார், முனிராஜ், அப்துல்கலாம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன், மாணவரணி அமைப்பாளர் கண்ணன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.கே.ஆர்.ரவி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு வட்டக்கிளை செயலாளர்கள் BLA–2, BLC தோழர்கள் மற்றும் கழக முன்னோடிகள், பெண்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. துரைசண்முகம்
### ஜூன் 26 (2014)



இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.

அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**